## வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் முன்னேற்றச் செயற்திட்டம் - 2017

---

வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2009 நவம்பர் 08 ஆந் திகதிய 4728-எல்கே ஆம் நிதியளித்தல் உடன்படிக்கையின் II பீ பிரிவின் 2 ஆம் பட்டியல் மற்றும் 2014 மே 08 ஆந் திகதிய ரீஎவ் 013787 ஆம் இலக்க மானிய உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளித்தல் உடன்படிக்கை மற்றும் மானிய உடன்படிக்கை என்பவற்றின் பிரகாரம், முன்னைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் தற்போதைய மாகாண சபைகள் உள்ளூராட்சி மற்றும் விளையாட்டு அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. கணக்களித்தல் மற்றும் பொறுப்புக்கூறல் முறையொன்றில் வடக்கு, கிழக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகள் மூலம் உள்ளூர் உட்கட்டமைப்பு சேவைகளின் வழங்கலை முன்னேற்றுதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். உடன்படிக்கைகளின் படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 12,942 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 107 மில்லினானதுடன் அதில் ரூபா 8,530 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70.70 மில்லியன் கடனாகவும் ரூபா 2,540 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 20.30 மில்லியன் மானியமாகவும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமெனவும் மிகுதி நிதி இலங்கை அரசினாலும் சமுதாய பங்களிப்புடனும் நிதியிடப்பட வேண்டும் என உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 மே 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர், 2017 ஆகஸ்ட் 31 வரை செயற்திட்டத்தின் காலப்பகுதி நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கே செயற்றிட்டத்தின் நிதிக்கூற்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில்

சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கட்டுநிதிக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடன் மற்றும் மானியம் என்பவற்றின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளித்தல் உடன்படிக்கை மற்றும் மானிய உடன்படிக்கை என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடன் மற்றும் மானியம் என்பவற்றின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) நிதியளித்தல் உடன்படிக்கை மற்றும் மானிய உடன்படிக்கை என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கட்டுநிதிக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) நிதியளித்தல் உடன்படிக்கை மற்றும் மானிய உடன்படிக்கை என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) நிதியளித்தல் உடன்படிக்கை மற்றும் மானிய உடன்படிக்கை என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

## 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | நிதியளிப்பு மற்றும் / மானிய உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | | | | 2017 ஆம் ஆண்டின் போது | 2017 திசெம்பர் 31 வரை |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | | | | | |
| - கடன் | 70.70 | 8,530 | 1,000 | 994 | 9,448 |
| - மானியம் | 20.30 | 2,540 | - | 176 | 2,540 |
| இலங்கை அரசாங்கம் | 14.00 | 1,662 | 200 | 32 | 1,643 |
| சமூக பங்களிப்பு | 2.00 | 210 | - | 25 | 539 |
| **மொத்தம்** | **107.00** | **12,942** | **1,200** | **1,227** | **14,170** |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

வடக்கு, கிழக்கு, வடமத்திய, வடமேல், மற்றும் ஊவா மாகாணங்களின் 101 உள்ளூராட்சி நிறுவன எல்லைப்பரப்புக்களின் கீழ் செயற்திட்ட ஆக்கக்கூறு - 01 இல் ரூபா 10,170 மில்லியன் அதாவது 90 மில்லியன் யூ.எஸ் டொலருக்கு சமமான கிரய மதிப்பீட்டின் கீழ் அமுலாக்கப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்பாடுகளான வீதி அபிவருத்தி, பொது சந்தைகள் மற்றும் பூங்காக்களின் கட்டுமாணம், மழை நீர் மற்றும் கழிவு நீர் வெளியேற்ற முறைமை புனரமைப்பு மற்றும் கிராமிய மின்சார வழங்கல் போன்றன கிடைக்கக் கூடியதாகவுள்ள தகவல்களின் படி 2017 திசெம்பர் 31 இல் நிறைவு செய்யப்பட்டன.

### 3.3 பயன்பாடற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

களப்பரீட்சிப்பு மேற்கொண்ட போது வடமாகாணத்தில் ரூபா 81.11 மில்லியன் செலவில் கட்டுமானம் செய்யப்பட்ட முசலி பிரதேச சபையின் கொண்டச்சி, சிலாவத்துறை , வேப்பங்குளம் மற்றும் மறிச்சுக்கட்டி சிறுவர் பூங்காக்கள் , மன்னார் பிரதேச சபையின் உயிலங்குளம், விடத்தல் தீவு, பெரியமடு சிறுவர் பூங்காக்கள் மற்றும் வவுனியா பிரதேச சபையின் ஈரப்பெரியகுளம், மகாகச்சகொடிய மற்றும் பெரியஉலுக்குளம் சந்தைத்தொகுதி கட்டுமானங்கள் மற்றும் முசலிப்பிதேச சபையின் சிலாவத்துறை பஸ் தரிப்பு நிலையம் என்பன மக்களின் பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற இடங்களில் கட்டுமானம் செய்யப்பட்டதனால் 2017 திசம்பர் 31 இல் 04 ஆண்டுகளுக்கு மேலாக மீண்டும் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.4 முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டு தீர்பனவு செய்யப்படாத விடயங்கள்

எனது முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் பின்வரும் அவதானிப்புக்கள் அறிக்கையிடப்பட்ட போதிலும் விடயங்கள் தொடர்பில் விசாரணை செய்து அது தொடர்பான பொறுப்பான அலுவலர்களை இனம்கண்டு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) வடமாகாணத்தில் 03 உள்ளூராட்சி மன்றங்களால் கேள்வி ஆவணங்களின் விலை விகிதங்களில் மாற்றம் செய்து 2015 ம் ஆண்டில் ரூபா 4.42 மில்லியன் மோசடியான கொடுப்பனவு மேற்கொண்டமை தொடர்பில் பொறுப்புடைய தரப்பினர்க்கு எதிராக அர்த்தமுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும் இது தொடர்பான விசாரணைகளுக்காக மாகாண நிதியத்திலிருந்து ரூபா 1.5 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்கான கேள்வியாளர் தெரிவிற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவின் தலைவராக செயற்திட்ட பொறியியலாளர் தொழிற்பட்டிருந்ததுடன் அந்த ஒப்பந்தத்தினை தனது சொந்த கம்பனிக்கு ரூபா 4.2 மில்லியன் செலவிலான ஒப்பந்தத்தை வழங்கியிருந்தார். இவற்றின் மீதான பொறுப்புவாய்ந்த அலுவலர்க்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்தல்

2017 ஆகஸ்ட் 31 ல் செயற்திட்ட செயற்பாடுகள் முடிவுறுத்தப்பட்ட போதும் , கலைப்பு நோக்கத்திற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு நிர்வகிக்கும் முகவராண்மையால் செயற்திட்ட மேற்பார்வை அலகுக்கு அவசியமான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.